### கொடைக்கானல் மலையடிவாரத்தில் அமைந்துள்ள

# மஞ்சளாறு அணையில் சுற்றுலாப் பூங்கா அமைத்திடுக!

## சட்டப் பேரவையில் பெரியகுளம் - கே.எஸ்.சரவணக்குமார் பேச்சு!

**சென்னை, ஏப். 21 -**

**சட்டப் பேரவையில் சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் பெரியகுளம் தொகுதி உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் பேசுகையில் மஞ்சளாறு அணையில் சுற்றுலாப் பூங்கா அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

சட்டப் பேரவையில் சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் பெரியகுளம் தொகுதி கே.எஸ்.சரவணக்குமார் பேசியதாவது:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தையும், முற்போக்கு சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான அண்ணல் அம்பேத்கர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

சமூக நீதியை உறுதி செய்வதற்கான தொலைநோக்குப் பார்வை கொண்ட திராவிட மாடல் ஆட்சியின் நாயகன், முதலமைச்சர், பல்கலைக்கழகங்களின் வேந்தர், சமத்துவ நாயகன், தளபதியார் அவர்களை வணங்குகிறேன். துணை முதலமைச்சர், எங்களது இளைய கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவை முன்னவர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும், எங்கள் மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான அண்ணன் இ. பெரியசாமி அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சார்ந்த பெரியகுளம் தொகுதி மக்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்மாவட்ட மக்களின் நீர்த் தேவையினைப் பூர்த்தி செய்த முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களுக்கு அவர் பிறந்த மண்ணான லண்டன் மாநகரில் சிலை நிறுவிய திராவிட நாயகனுக்குத் தென்மாவட்ட மக்களின் சார்பில் மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவ சுற்றுலாவில் இந்திய ஒன்றியத்திலேயே நமது மாநிலம்தான் முதலிடம் வகித்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தேனி அல்லி நகரத்தில் உள்ள மீறு சமுத்திர ஏரியை சுற்றுலா வசதிகளுடன்கூடிய படகுக் குழாமாக அமைப்பதற்கு ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் ஒதுக்கீடு செய்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வைகை அணை எவ்வாறெல்லாம் புகழ் பெற்றது, கடந்த ஆட்சிக் காலத்தில் எவ்வாறெல்லாம் சிறப்பு பெற்றது என்பது நமக்குத் தெரியும். மேலும் அதனை சிறப்பிக்கும் விதமாக வைகை அணையில் சிறுவர் பூங்காவை மேம்படுத்த வேண்டும். புது விளையாட்டு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும். அடுக்கு அருவிகள் சீரமைக்கப்பட வேண்டும். 1959 ஆம் ஆண்டில் அணை கட்டியபோது, சிறுவர்களுக்கான இரயில் வண்டி இயக்கப்பட்டது. அதற்குப் பதிலாக சிறுவர்களுக்கான புதிய இரயில் வசதி ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

மஞ்சளாறு அணை கொடைக்கானல் மலையடிவாரத்தில் புலிவால் அருவியின்கீழ் அமைந்துள்ளது. இந்த அணையில் சுற்றுலாப் பூங்கா அமைத்துத் தர வேண்டும். சோத்துப்பாறை அணையிலும் சுற்றுலாப் பூங்கா அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பக்கரை அருவி, பெரியகுளத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. மேலும், கொடைக்கானல் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்த அருவியின் நீரில் மூலிகை



கள் மற்றும் தாதுப் பொருட்களின் நற்குணங்கள் பெருகியுள்ளன. இங்கு ஒரு சுற்றுலாப் பூங்கா, வாகனம் நிறுத்துமிடம் மற்றும் சுகாதார வளாகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சின்ன சுருளி அருவி, தேனியிலிருந்து 54 கி.மீ. தொலைவில் கோம்பை தொழு கிராமத்திற்கருகில் உள்ளது. இந்த அருவி மேகமலைப் பகுதியிலிருந்து உற்பத்தியாகிறது. இந்த அருவியைச் சுற்றுலாத் தலமாகத் தரம் உயர்த்தித் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியின் நாயகன், தலைவர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருக்கோயில்களில் தொடர்ந்து திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. உதாரணமாக, பெரியகுளம் தொகுதி தேவதானபட்டியில் அமைந்துள்ள அருள்மிகு மூங்கிலணை ஸ்ரீ காமாட்சியம்மன் திருக்கோயிலில் தற்போது ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதே போன்று, இத்திருக்கோயிலில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பக்தர்கள் வசதிக்காக தங்கும் விடுதியும் கட்டப்பட்டு வருகிறது. தேவையான அளவில் இத்திருக்கோயிலில் கழிப்பறை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் பக்தர்களின் பசியைப் போக்கும் விதமாக, பக்தர்கள் வசதிக்காக நாளொன்றுக்கு 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுவருகிறது. நெய் மண்டபம் கட்டப்பட்டு, பக்தர்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், ஆன்மீக புத்தக நிலையம் திறக்கப்பட்டு, பக்தர்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழகம் முழுவதும் திராவிட ஆட்சியின் நாயகன், முதலமைச்சர் தளபதியாரின் ஆட்சியில் திருப் பணிகள் நடந்துவருகின்றன. அதற்காக, முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இத்திருக்கோயில் வளாகங்கள் முழுவதும இரவு நேரங்களில் மின் வெளிச்சம் போதுமானதாக இல்லாததால், உயர் மின் கோபுர விளக்குகள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேனி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில், வற்றாத வளர்ந்துவரும் வராக நதிக் கரையோரம் அமைந்துள்ள பெரியகுளம் பால சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலானது, சுமார் 1,000 ஆண்டுகளுக்கு மேலான சிறப்பு வாய்ந்ததாகும். பாண்டியர் காலத்தில் ஆரம்பித்து, சோழர் காலத்தில் கட்டப்பெற்று, நாயக்கர் காலத்தில் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்தப் பெற்ற பழமை வாய்ந்த கோயிலாகும்.

காசிக்கு அடுத்தபடியாக ஆண் மருது, பெண் மருது ஆகிய மரங்கள் ஒரே இடத்தில் அமையப் பெற்றுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்கோயிலில் திருமண மண்டபமும், தனியாக ஒரு சுகாதார வளாகமும் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரியகுளம் அருள்மிகு மலைமேல் வைத்திய நாத சுவாமி திருக்கோயில் தேரை புதுப்பித்து புதிதாக தேர் கொட்டகை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**கோவில்களுக்கு திருக்குடமுழுக்கு!**

தேனி நகரில், அருள்மிகு சோலைமலை அய்யனார் திருக்கோவிலுக்கு திருக் குடமுழுக்கு, திருப்பணி மற்றும் வீரப்ப அய்யனார் கோவிலுக்கு சுகாதார மேம்பாட்டு பணிகள் செய்து தர வேண்டும். பெரியகுளம் தென்கரையில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி சுந்த ரேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருக்குடமுழுக்கு, திருப்பணி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேனி மாவட்டம், உத்தமபாளையம் நகரில் தென் காளகஸ்தி எனப்படும் ராகு, கேது பரிகார ஸ்தலமான அருள்மிகு ஞானாம்பிகை உடனுறை திருக்காளாத்தீஸ்வரர் திருக்கோவில் விளங்கு கிறது. ஆந்திர மாநிலத்திலுள்ள காளகஸ்திக்கு நிகராக தென்பகுதி மக்களுக்கு பரிகார பூஜை செய்யும் நவக்கிர ஸ்தலமாக விளங்குகிறது. கோயிலின் வெளிப் பிரகாரத்தில் 7,000 சதுர அடி பரப்பளவு காலியிடம் உள்ளது. நாளுக்கு நாள் பக்தர்களின் வருகை அதிகரித்து வருவதால், பக்தர்களின் நலன் கருதி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி யும், பக்தர்களின் இளைப்பாறும் மண்டபமும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தளபதியார் அவர்கள் சொன்னதை செய்வோம், சொல்லாததையும் செய்வோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக, பெரியகுளம் தொகுதியில் தேர்தல் வாக்குறுதியில் சொல்லாத நீர்ப்பாசனத் துறைமூலம் முருகமலை வாலாட்டி பகுதியில் புதிதாக ஏரி வெட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் சுற்று வட்டார பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதற்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டியில் உள்ள மஞ்சளாறு அணையின் வலது பிரதான கால்வாயை முழுமையாக புணரமைக்க நிதி ஒதுக்கியமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியகுளம் தொகுதியில், நிலத்தடி நீர் மட்டம் குறைந்த பகுதிகளான A.வாடிப்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி பகுதிகள் பயன்பெறும் வகையில் மஞ்சளாறு அணையில் இருந்து தெற்கு கால்வாய்மூலம் எருமலைநாயக்கன்பட்டி வரை வரும் கால்வாயில் மழைக் காலத்தில் நிரம்பி வீணாக செல்லும் உபரி நீரை ரெங்கநாதபுரம்,சேத்துராம் ஊரணி வரை சுமார் 2 கி.மீ. தூரம் வாய்க்கால் அமைத்துக் கொடுத்தால் சிறு ஓடைகளிலும், குளங்களிலும் உபரிநீர் பெருகி நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, பல ஆயிரம் ஏக்கருக்குமேல் விவசாய நிலங்கள் பயன்பெறும். பெரியகுளம் வட்டத்தில், வெள் ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளான பட்டாளம்மன் கோவில் தெரு மற்றும் பங்களாபட்டி அருகில் உள்ள வராக நதியில் வெள்ள தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற வளர்ச்சித் துறைமூலம் பெரியகுளம் தொகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்மூலம் பூங்காக்கள், வணிக வளாகங்கள், அறிவுசார் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அறிவுசார் மையங்களின் மூலம் நமது மாநிலத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் பெருமளவில் ஒன்றிய அரசு பணிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதற்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். தென்கரை பேரூராட்சிக்கு சோத்துப் பாறை கூட்டுக் குடிநீர் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி தந்தமைக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேருந்து நிலையம் மேம்படுத்த நிதி ஒதுக்கீடு!**

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் தேனி அல்லி நகரம் பேருந்து நிலையத்தினை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு, பெரியகுளம் நகராட்சிக்கு புதிய சந்தை அமைக்க நிதி ஒதுக்கீடு, வடுகபட்டி பேரூராட்சிக்கு அறிவுசார் மையத்திற்கு நிதி ஒதுக்கீடு, மேலும் கெங்குவார்பட்டி பேரூராட்சிக்கு நவீன எரிவாயு தகன மேடை என பல்வேறு திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கியமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தேவதானப்பட்டி பேரூராட்சியின் மையப் பகுதியில் செல்லும் ஓடையை முழுமையாக சீரமைத்துத் தர வேண்டும். தாமரைக்குளம் மற்றும் தென்கரை பேரூராட்சிகளில் அறிவுசார் மையம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை மூலம், பெரியகுளம் தொகுதிக்குட்பட்ட A.வாடிப்பட்டி சுற்று வட்டார பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான A.வாடிப்பட்டி யிலிருந்து ஆண்டிப்பட்டி செல்லும் விதமாக புதிய மேம்பாலம் ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் A. வாடிப்பட்டியி லிருந்து ஆண்டிபட்டி செல்வதற்கும், நடுகோட்டை மற்றும் புள்ளிமான் கோம்பையிலிருந்துபெரியகுளம் மற்றும் வத்தலகுண்டு செல்வதற்கும், மிகவும் உதவும் வகையில் இந்த பாலம் அமைகிறது. இந்தப் பாலம் அமைத்ததால் 6, 7 கிராமங்களுக்கு புதிதாக போக்குவரத்து வசதி கிடைத்துள்ளது. இந்தப் பகுதி மக்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேல்மங்கலம் அக்ரஹாரம் அருகில் வராக நதியின் குறுக்கே புதிய பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பாலத்தின்மூலம் 800 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாயிகள் பயன்பெறுவர். இந்தப் பகுதி மக்களின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**குடிசை இல்லாத தமிழகம்!**

குடிசை இல்லாத தமிழகத்தை உருவாக்க, ‘கலைஞரின் கனவு இல்லம்’ என்ற புதிய திட்டத்தினால், அதிக ஊராட்சி பகுதிகளைக் கொண்ட பெரியகுளம் சட்டமன்ற தொகுதியில், பல குடிசை வீடுகள் இன்று கான்கிரீட் வீடுகளாக மாறிக்கொண்டே இருக்கின்றன. இதற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஜெயமங்கலம் மயான பகுதியில் அருகில் வராக நதியின் குறுக்கே புதிய பாலமும், ஜல்லிபட்டி ஊராட்சி, மீனாட்சிபுரம் ஓடையில் புதிய பாலமும், வடபுதுபட்டி ஊராட்சி, தடமலைநாயக்கன்பட்டி தெற்கு பெரிய ஓடையில் புதிய பாலமும், குள்ளபுரம் ஊராட்சி, கோவில்புரம் அருகே வராக நதியின் குறுக்கே புதிய பாலமும், (மணியடிக்கப்பெற்றது)

நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற்று, இந்திய ஒன்றியத்திலேயே சிறப்பான சாலைகளை கொண்ட மாநிலமாக நமது மாநிலம் திகழ்கிறது. தேனி நகர் பகுதியில் போக்குவரத்து மிகவும் எளிதாக இருக்கும் விதத்தில் தேனிபெரியகுளம் நெடுஞ்சாலையில் ரயில்வே மேம்பாலமும், மேலும் தேனி ரயில் நிலையத்தையும், குமுளி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கும் விதமாக புறவழிச்சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பெரியகுளம் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக போக்குவரத்து பணிமனை மற்றும் மயான சாலை வழியாக பெரியகுளம்வடுகபட்டி மாநில நெடுஞ்சாலையுடன் இணைத்து புதிய புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையின்மூலம், தேவதானப் பட்டியிலிருந்து ஜெயமங்கலம், மாவட்ட அரசு மருத்துவமனை வழியாக புதிதாக வழித்தடம் அமைத்துக் கொடுத்ததால், இந்தப் பகுதி மக்கள் மாவட்ட அரசு மருத்துவமனை மற்றும் மாவட்ட அரசு அலுவலகங்களுக்கு எளிதாக சென்று வருகின்றனர். இப்பகுதி மக்களின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், G. கல்லுப்பட்டியிலிருந்து தேனிக்கு ஒரு புறநகர் பேருந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வழியாக இயக்க வேண்டும். பெரியகுளம் அரசு மருத்துவமனையில் இருந்து தேனிக்கு புறநகர் பேருந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வழியாக இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேனி நகரில் மக்கள் தொகை அதிகரித்துவிட்டது, எனினும், வருவாய்த் துறையில் ஒரு கிராம நிர்வாக அலுவலர் மட்டுமே உள்ளார். எனவே பொது மக்கள் வருவாய்த் துறையின் சேவைகளை எளிதில் பெரும் விதமாக Bit 1, Bit 2 என்ற இரண்டு வருவாய் கிராமமாக பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள்!**

மேலும், பள்ளிக்கல்வித் துறையில், பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறைகள் தேவையான அளவிற்கு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கெங்குவார்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைக் கட்டிடம், ஆய்வகம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரியகுளம் தொகுதியில் மதுராபுரி மற்றும் வைகை அணையில் 10 MVA, 16 MVA ஆக தரம் உயர்த்தப்பட்டு, தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெயமங்கலம் பகுதியில் புதிய 110/22 KV துணை மின் நிலையம் அமைப்பதற்கு பூர்வாங்க அனுமதி பெறப்பட்டு நிலமும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது அதற்குரிய நிதியொதுக்கீடு செய்து பணியைத் துரிதப்படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலம் பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் 8.5 கோடியில் கட்டப்பட்டு, அது பயன்பாட்டுக் கொண்டுவரப்பட்டுள்ளது. வைகை அணையில் ஆரம்ப சுகாதார நிலையத்திறகு புதிய செவிலியர் குடியிருப்பு கட்டப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தேனி நகரில், இரண்டு நகர நல்வாழ்வு மையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப் பட்டுள்ளது. பெரியகுளம் நகரில் நகர நல்வாழ்வு மைய மும், அழகர்சாமிபுரத்தில் துணை சுகாதார நிலையமும் கட்டி முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட வுள்ளது.

கழக ஆட்சியானது தந்தை பெரியாரின் வழியில், அறிஞர் அண்ணாவின் வழியில், முத்தமிழறிஞர் கலைஞரின் வழியில் மாநில சுயாட்சியாக இருந்தாலும், பல்கலைக்கழகமாக இருந்தாலும், NEET ஆக இருந்தாலும், வக்பு திருத்த மசோதாவாக இருந்தாலும், புதியக் கல்விக் கொள்கையாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் யாரிடத்திலும் எதற் காகவும் மண்டியிடாமல் போராடும் நாயகன், நமது திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தளபதியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!! தளபதியார் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டுவார். நாடும் நமதே, 234 ம் நமதே.

இவ்வாறு கே.எஸ். சரவணகுமார் பேசினார்.




தூத்துக்குடி தெற்கு மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக நிர்வாகிகளுக்கான பொறுப்புகளுக்கு பொறியாளர் அணி qr கோடு மூலம் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பி. அன்பழகன், மாவட்ட அமைப்பாளர் சி.எஸ்.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடன் வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் இளையராஜா, பில்லா ஜெகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மண்டல வாரியாக தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி யில் நடந்த மாணவர் அணியை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்து, “மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்” இன்று (21.04.2025) காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் ஜெ.ராமகிருஷ்ணன் முன்னிலையில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான பவளவிழா மாளிகையில் காஞ்சிபுரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய, திருப்பத்தூர், வேலூர் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநாகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர் துணை அமைப்பா ளர்கள் ஆய்வுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்டவாறு நடைபெறுயம் ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்துகொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் மாவட்ட, துணை அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டுவர வேண்டும்.

அத்துடன், இதுவரை செய்த செயல்திட்டங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புகளை அவசியம் கொண்டுவர வேண்டும். அத்துடன் கல்லூரிகள் கட்டமைப்பின் தகவல்களையும் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை,

**இரா.ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரூ 2.63கோடி மதிப்பீட்டில் பழங்குடியின மக்கள் வீடு கட்டுவதற்கான உத்தரவினை மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பழனி, சசிகலா ஆகியோர் உள்ளனர்.



ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி கழக இளைஞரணி சார்பில் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம், நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்தில் திராவிட கழக துணை பொது செயலாளர் வழக்கறிஞர் செ.மே.மதிவதனி, ச.அ.பெருநற்கிள்ளி, ச.ஐஸ்வர்யா, மு.ரோஜா தே.மலையரசன் எம்பி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வெட்டுக்காடு பொதுப் பணித்துறை ஆய்வுமாளிகை புதியதாக கட்டப்படுமா?

## சட்டப்பேரவையில் திருவையாறு துரை. சந்திரசேகரன் கேள்வி!



**சென்னை. ஏப்.21-**

**சட்டப்பேரவையில் திருவையாறு தொகுதி உறுப்பினர் துரை. சந்திரசேகரன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:**

**துரை. சந்திரசேகரன்:** தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெட்டுக்காடு பொதுப் பணித் துறையினுடைய ஆய்வு மாளிகை ஓட்டு கட்டடம் இடிந்துள்ளது. புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ. வேலு:** அவர் குறிப்பிடுகிற, அதை புதுப்பிப்பது என்பது அந்த அடிப்படையிலும் சரி, தொடர்ந்து சட்டப்பேரவையை உறுப்பினர்கள் ஆய்வு மாளிகை அமைக்க வேண்டுமென்ற பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் தொடர்ந்து, இந்த ஆய்வு மாளிகை குறித்து முன்னுரிமை கொடுத்து அனைவரும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுடைய மூத்த அமைச்சர் கே.என். நேரு அவர்கள் கூட திருச்சியிலே கூடுதலாக மாளிகை கட்ட வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஏனென்றால் பொதுவாகவே திருச்சியில் இறங்கி தான் அந்தப் பகுதியில் காவிரி டெல்டா பகுதி போன்ற பகுதிக்கு பெரும்பான்மையான அமைச்சர்கள், சம்பந்தப்பட்ட I.A.S அதிகாரிகள் எல்லாம் அங்கே flightல் இறங்கிதான் போகவேண்டும். அதனால் கூடுதலாக தேவை என்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஒன்றன்பின் ஒன்றாக அதையெல்லாம் ஒருங்கிணைத்து முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து இந்த ஆண்டு எதையெதை எல்லாம் எடுக்க முடியுமோ அதற்கு முன்னுரிமை கொடுத்து எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

## ஒட்டப்பிடாரம் தொகுதி - கருங்குளம் ஒன்றியம்

# சிங்கத்தா குறிச்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்திடுக!

## சட்டப்பேரவையில் எம்.சி.சண்முகையா வேண்டுகோள்



**சென்னை. ஏப்.21-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஒட்டப்பிடாரம் தொகுதி உறுப்பினர் எம்.சி.சண்முகையா கேட்ட கேள்வியும் அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் அளித்த பதிலும் வருமாறு:**

**எம்.சி. சண்முகையா:** ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், சிங்கத்தாகுறிச்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட சிங்கத்தாகுறிச்சி கிராமத்தில் இரண்டு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்கு 12 ஆயிரம் லிட்டர்தான் பால் உற்பத்தி செய்கிறார்கள். எனவே, அங்கு பால் குளிரூட்டு நிலையம் அமைக்க வாய்ப்பில்லை .

**எம்.சி. சண்முகையா:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், சிங்கத்தாகுறிச்சியில் பால் உற்பத்தி போதுமான அளவு இருக்கும்பட்சத்தில், பால் குளிரூட்டு நிலையம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்துள்ளார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிங்கத்தாகுறிச்சி மற்றும் அதனைச் சுற்றி யுள்ள கிராமப் பகுதிகள் என்பது கால்நடை வளர்ப்பு, விவசாயம் சார்ந்த பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பாலை, நாஞ்சில், முரளி ஆகிய தனியார் பால் நிறுவனங்கள் தினந்தோறும் சுமார் 3 ஆயிரம் லிட்டர் அளவுக்கு கொள்முதல் செய்து வருகிறார்கள். ஆக, சிங்கத்தா குறிச்சியை மையமாக வைத்து, 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டு நிலையம் அமைக்கப்படும்பட்சத்தில், அப்பகுதி மக்கள் கறவை மாடுகளை வளர்த்து, பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது. எனவே, சிங்கத்தாகுறிச்சியில் பால் குளிரூட்டு நிலையம் அமைக்கப்பட வேண்டும்

**ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்:** திருநெல்வேலி யிலிருந்து தூத்துக்குடியை இரண்டாகப் பிரித்து, இரண்டு ஒன்றியங்களாக அமைத்திருக்கிறோம். அதேபோல, தூத்துக்குடியிலிருந்து சிங்காரக்குடி என்கிற கிராமம் 7 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதுகுறித்துதான் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள். அங்கு 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டு நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கு மொத்தமாக 2 ஆயிரத்து 235 லிட்டர் அளவுதான் பால் வருகிறது. ஆனால், 81 இலட்சம் ரூபாய் அளவுக்கு loan கொடுத்திருக்கிறோம். 18 ஆயிரம் மாடுகளைக் கொடுத்திருக்கிறோம். 432 மாடுகள் இருக்கின்றன. நிறைய கொடுத்திருக்கிறோம். இன்னும் loan கொடுக்கப் போகிறோம்.

2 ஆயிரம் கோடி, 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு loan கொடுக்கப் போகிறோம். எனவே, பால் உற்பத்தியை கூட்டுகிறபட்ச த்தில், நிச்சயமாக, அங்கு பால் குளிரூட்டு நிலையம் அமைக்கப்படும் .

**எம்.சி. சண்முகையா:** ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டையில் கால்நடை மருந்தகத்திற்குட்பட்ட பகுதிகளில் சுமார் 4 ஆயிரம் கறவை மாடுகள் உள்ளன. இப்பகுதிகளில் தினந்தோறும் சுமார் 7 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பால் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதுக்கோட்டையை மையமாக வைத்து, 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பால் விற்பனையை பொறுத்த மட்டில், ஒரு லிட்டர் பால் ரூ.14/க்கு வெளியே, private வாங்குகிறார்கள். நம்மிடத்தில் வாங்குகிற உற்பத்தியாளரும் ஏழை, consumerம் ஏழை. அதனால் நாம் குறைத்து கொடுக்கிறோம். நாம் ஒரு லிட்டர் பால்

ரூ.40/க்குத்தான் கொடுக்கிறோம். அவர்கள் ரூ.54/லிருந்து ரூ.56/ வரை கொடுக்கிறார்கள். எல்லா மாநிலங்களிலும விலையைக் கூட்டி விட்டார்கள். நாம்தான் இன்னும் விலையைக் கூட்டாமல் வைத்திருக்கிறோம். பால் உற்பத்தி என்பது, 2 மாதம் lean period என்று சொல்கிறோம். 2 மாதம் குறையும். 3 இலட்சம் லிட்டர் அளவுக்கு பால் உற்பத்தி குறைந்திருக்கிறது. இந்த 2 மாதத்தில் 4 இலட்சத்து 17 ஆயிரம் லிட்டர் அளவுக்கு பால் உற்பத்தி கூடியிருக்கிறது. நம்முடைய ஆட்சி வந்தபிறகு, இந்தத் துறையில் நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இதுவரை கூட்டியிருக்கிறோம். ஆக, lean periodல் பால் உற்பத்தி குறைவெல்லாம் கிடையாது. விலையும் குறைவாக இருக்கிறது. கிட்டத்தட்ட 34 இலட்சம் கூட்டி யிருக்கிறோம். அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும், consumerகளுக்கும் கொடுக்கிறோம். பிரச்சினை இல்லாமல் இருக்கிறது. இப்போது ஒன்றும் பிரச்சினை இல்லை. ஏழை, எளிய மக்கள் வாங்கிக் குடிக்கி றார்கள். ஆனால், வசதி படைத்தவர்களும், டீ கடைக்காரர்களும்தான் வெளியில் வாங்குகிறார்கள். Privateல் விற்பனை செய்கிற விலையைத்தான் உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பதிலளித்தார்..

## பூம்புகார் தொகுதி - குத்தாலம் ஒன்றியம்-

# கங்காதரபுரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்!

## சட்டப்பேரவையில் நிவேதா எம். முருகன் கோரிக்கை!



**சென்னை, ஏப்.21-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பூம்புகார் நிவேதா முருகன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அளித்த பதிலும் வருமாறு:**

**நிவேதா எம். முருகன்:** மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கங்காதரபுரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் கங்காதரபுரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**நிவேதா எம். முருகன்:** பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கங்காதரபுரம் ஊராட்சியில் வேளாண்மை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. இது குறித்து பலமுறை சட்டமன்றத்தில் பேசியுள்ளேன். தொகுதி முதலமைச்சர் UTM திட்டத்திலும் தந்துள்ளேன். எங்கள் பகுதி விவசாயத் தொழிலை மட்டுமே நம்பியுள்ள பகுதி. சுமார், அந்தப் பகுதியில் மட்டும் 3,300 ஏக்கர் விவசாய நிலங்களை உள்ளடக்கிய பகுதி. கிராமங்களைப் பொறுத்தவரையில் பாலையூர், நக்கம்பாடி, கோனேரிராஜபுரம், கோரிமங்கலம், சிவனாகரம், மாந்தை, எழுமகளூர் என சுமார் 30க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் கொண்ட பகுதி. தற்போதுள்ள வேளாண்மை விற்பனைக் கூடம் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டருக்கு மேல் செல்ல வேண்டியுள்ள காரணத்தால்,

இந்நிலையில், கங்காதரபுரம் ஊராட்சியில் ஐந்து ஏக்கர் நிலம் வேளாண் விற்பனைக் கூடம் அமைப்பதற்காக கையகப்படுத்தப் பட்டுள்ளது. வேளாண்மைத் துறை அதிகாரிகளும் அதை பார்த்து செய்து தருவார்கள் என்ற காரணத்தினால் அமைச்சரிடமும் கூறியிருக்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அதை அமைத்துத் தர முன்வர வேண்டுமென்று தாங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்:** மயிலாடுதுறை மாவட்டத்திலே கிட்டத்தட்ட குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார்கோவில், சீர்காழி ஆகிய நான்கு இடங்களில் நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருக்கின்றது. அவற்றில் கிட்டத்தட்ட ஆண்டிற்கு 14,970 மெட்ரிக் டன் வரத்து வந்து கொண்டிருக்கிறது. அதேபோல மொத்த வரத்து மதிப்பு கிட்டத்தட்ட 45 கோடி அளவிற்குதான் அங்கு transaction நடக்கிறது. அதனால், 10,502 விவசாயிகள் பயன்பெற்று கொண்டிருக்கிறார்கள். கங்காதரபுரம் கிராமத்திலே தற்சமயம் அமைப்பதற்கு வேண்டிய சூழல் அங்கு இல்லை. ஏனென்றால் தஞ்சை டெல்டா பகுதியில் நெல் கொள்முதல் செய்கின்ற 178 Civil Supplies Corporation மூலமாக, Tamil Nadu Civil Supplies Corporation (TNCSC) மூலமாக நெல்லை கொள்முதல் செய்கின்றார்கள்.

அதேபோல தஞ்சை மாவட்டத்தில் டெல்டா பகுதியில் அதிகமாக நெல்லைத் தவிர மற்ற மாற்றுப் பயிர்கள் பருத்தி, இந்த seasonல், கோடைகாலத்தில் பருத்தி போடலாம். மற்ற மாற்றுப் பயிர்கள் எள், கடலை எல்லாம் அதிக விவசாயிகள் உற்பத்தி செய்யவில்லை. செய்ய வேண்டுமென்று நாங்கள் கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதுபோன்ற நிகழ்வு ஏற்படும்போது தேவைப்படின் அந்த இடத்தில் உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று பரிசீலிக்கப்படும் .

**நிவேதா எம். முருகன்:** எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை வேறு எந்தத் தொழிலுமே கிடையாது. விவசாயத்தை மட்டுமே கொண்ட ஒரே மாவட்டம் எங்கள் மாவட்டம். வேறு எந்தத் தொழிலுமே கிடையாது. அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து வேளாண்மை விற்பனைக் கூடம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது பூம்புகார் தொகுதியில் செம்பனார் கோவில் ஒன்றியம் தோட்டக்கலைப் பண்ணை அமைக்க வேண்டுமென்று கூறுகிறேன். ஏனென்றால் எங்கள் மாவட்டத்திற்கு வேண்டிய நாற்று அனைத்தும் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வண்டுவாஞ்சேரியிலிருந்து வர வேண்டியுள்ளது. தூரம் அதிகமாகவுள்ள காரணத்தினாலும், எங்கள் மாவட்டத்திலே தில்லையாடி ஊராட்சியில் நாவல் தோப்பு என்ற இடத்தில் இடமும் உள்ளது.

அதேபோல, திருக்கடையூர் ஊராட்சியில் வேளாண்மைத் துறைக்கு சொந்தமான நிலங்களும் அதிகமாக உள்ளன. ஆகையினால், பின்தங்கிய விவசாய மாவட்டமான எனது மாவட்டத்திற்கு தோட்டக்கலை பண்ணை மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தினை கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எங்கள் ஊரின் ஆற்றிற்கு மறு பகுதியில்தான் உறுப்பினர் அவர்கள் சொன்ன ஊர் இருக்கிறது. அங்குள்ள விவசாயிகளை நெல்லுக்கு மாற்றாக வேறு பயிர்களை பயிரிட வேண்டுமென்று நாங்கள் கூறி வருகின்றோம். நெல் பயிரினைவிட்டால் வேறு விவசாயமும் இல்லை. செம்பனார்கோயில் பகுதியிலே தோட்டக்கலை பண்ணை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாவட்டம் அதிகமாக விவசாயிகள் உள்ள மாவட்டம் தான். கரும்பினை மாற்றுப் பயிராகக் கொண்டு வந்தார்கள். இப்போது கரும்பிற்கும் உரிய விலை கொடுத்து, அதிகமாக கரும்பு பயிரிடப்படுகின்ற ஒரு சூழலை ஏற்படுத்தி கொண்டிருக்கின்றோம். ஆகவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கங்காதரபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்குரிய வாய்ப்பு பிற்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியம், கெடிலம் ஊராட்சியில், வடக்கு மாவட்ட விவசாய அணி தலைவர் பத்மநாபன் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்வில், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு தாகம் தணிக்கும் வகையில் தர்பூசணி,கரும்பு ஜூஸ் , கம்மங்கூழ், நீர் மோரை வழங்கினார்,இதில் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாண்டியன், அரசு வழக்கறிஞர் பி.ஆர்.வெங்கடேசன் மற்றும் ஒன்றிய, கிளை,கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்,துணை தலைவர், ஒன்றிய கவுன்சிலர்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



உளுந்தூர்பேட்டை நகர கழகம் சார்பில், கழகத் தலைவர், முதல்வர் பிறந்தநாள் விழா த.டேனியல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, ஆ.ஜெ. மணிக்கண்ணன் எம்.எல்.ஏ., ஆகியோர் பேசினர். இந்த பொதுக்கூட்டத்தில் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## ஈரோடு வடக்கு மாவட்டம் – முன்னாள் எம்.எல்.ஏ.

# ஒ.எஸ்.சுப்பிரமணியம் மனைவி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 21–

ஈரோடு வடக்கு மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஒ.எஸ்.சுப்பிரமணியம் அவர்களின் மனைவி திருமதி எஸ்.லட்சுமி அம்மாள் அவர்கள் நேற்று முன்தினம் (19.4.2025 - சனிக்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை, மனைவியை இழந்து வாடும் முன்னாள் எம்.எல்.ஏ., ஒ.எஸ். சுப்பிரமணியனுக்கும், அன்னாரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.



முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடலூர் கிழக்கு மாவட்டம், கடலூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட சேடப்பாளையம் ஊராட்சியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நீர்மோர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது. மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன் துவங்கி வைத்தார். ஒன்றிய கழக செயலாளர் காசிராஜன்,கழக நிர்வாகிகள்,இளைஞர் அணி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.